**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 25.08.2025** **நேரம் மாலை 6.10 மணி**

------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்னும் நிலைப்பாட்டை, **இந்தியாவும்-ஃபிஜியு**ம், மீண்டும் வலியுறுத்தி உள்ளன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை **குஜராத் மாநிலம் அகமதாபாத்**தில், மொத்தம் 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற நடைமுறைகள் குறித்து, **தேசிய திட்டம்** ஒன்றை தயாரிப்பது பற்றிய, 2 நாள் **பிராந்தியப் பயிலரங்கு**, புதுச்சேரியில் இன்று தொடங்கி உள்ளது.

புதுச்சேரி சட்டப் பேரவைத் தலைவர் **திரு. ஆர். செல்வம்**, டெல்லியில் நடைபெறும் **இந்திய சபா நாயகர்கள் மாநாட்**டில், கலந்து கொண்டு உரையாற்றினார்.

-------------------------------

மோடிஃபிஜி 1 (16)

தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்னும் நிலைப்பாட்டை, இந்தியா-ஃபிஜியும், மீண்டும் வலியுறுத்தி உள்ளன. இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ஃபிஜி பிரதமர் திரு. சிடிவேனி ராபுக்கா-விற்கும் இடையே நடைபெற்ற, பிரதிநிதிகள் நிலையிலான பேச்சு வார்த்தைகளின் போது, தீவிரவாதத்தை எதிர்ப்பதில், இரட்டை வேடத்தை புறக்கணிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப் பட்டது. இப்பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில், 7 உடன்பாடுகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

ஃபிஜி தலைநகர் சுவா-வில், 100 படுக்கைகள் கொண்ட உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். இம்மருத்துவமனையில், டயாலிசிஸ்

பிரிவுகள், மற்றும் ஜன அவுஷதி மருந்தகங்கள் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில், பரஸ்பரம் அனுபவங்களை பரிமாறிக் கொள்ள, இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

*மோடிஃபிஜி* 2 (8)

பருவநிலை மாற்றத்தால் ஃபிஜி அதிகம் பாதிக்கப் படுவதை பிரதமர் சுட்டிக்காட்டி, பாதிப்புகளை சமாளிப்பதற்கான உத்திகளின் ஒருபகுதியாக, புதுப்பிக்கவல்ல எரிசக்தி துறையில் இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஃபிஜி பிரதமர் திரு. ராபுக்கா இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், அமைதி, நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சியை பேணுவதில், இருநாடுகளும் ஒன்றுபட்டு நிற்பதாக கூறினார். இந்தியாவுடனான உறவுகளுக்கு ஃபிஜி தொடர்ந்து, பெரிய அளவில் மதிப்பளிக்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

-------------------------------

*மோடி-குஜராத்* (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை குஜராத் மாநிலம் அகமதாபாத்தில், மொத்தம் 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களை தொடக்கி வைக்கிறார். அகமதாபாத் மற்றும் காந்திநகர் பகுதிகளுக்கான வளர்ச்சித் திட்டங்களும், ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான மின் விநியோகத் திட்டங்களும் இதில் அடங்கும். புதிய மின் விநியோகத் திட்டங்களால், சாதகமற்ற வானிலைக்கு இடையிலும், தடையின்றி மின்சாரம் வழங்கவும், விநியோக இழப்புகளை குறைக்கவும் ஏதுவாகும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதுஅல்லாது காந்திநகரில், மாநில அளவிலான டேட்டா சேகரிப்பு மையம், மற்றும், மேற்கு அகமதாபாத்தில், பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணிகளுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

-------------------------------

*புதுச்சேரி பருவநிலை மாற்றம்* 1 (16)

பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற நடைமுறைகளை, பல்வேறு துறைகளில் அமல்படுத்தும் வகையில், தேசிய திட்டம் ஒன்றை தயாரிப்பது குறித்து, புதுச்சேரியில், சம்பந்தப்பட்ட பல்வேறு துறையினருக்கு இடையே ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 2 நாள் பிராந்தியப் பயிலரங்கு இன்று தொடங்கி உள்ளது. மத்திய சுற்றுச் சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அமைச்சகமும், சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜெர்மன் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள

இப்பயிலரங்கை, புதுச்சேரி அரசின் அறிவியல்-தொழில்நுட்பம், சுற்றுச் சூழல், மற்றும், வனத்துறைச் செயலர் திரு. ஜவஹர் தொடக்கி வைத்தார். பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்த, பிராந்திய அளவில், உள்ளூர் சூழலுக்கு ஏற்ற, அனைவரையும் உள்ளடக்கிய உத்திகளை கையாளுதல் அவசியம் என்று அவர் தமது உரையில் வலியுறுத்தினார். சுற்றுச் சூழல் மாற்றத்தால் ஏற்பட்ட மாற்றங்களை புரிந்து கொள்ளவும், நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய உத்திகளை அமல்படுத்தவும், மிகவும் ஏற்ற பரிசோதனை களமாக, புதுச்சேரி திகழ்வதாக, அவர் தெரிவித்தார். திரு. ஜவஹர் மேலும் கூறுகையில்……

**(வாய்ஸ்-ஜவஹர்)**

*புதுச்சேரி பருவநிலை மாற்றம்* 2 (10)

பருவநிலை மாற்றம் பற்றிய பிராந்திய பயிலரங்கின் தொடக்க விழாவில், புதுச்சேரி அரசின் அறிவியல் தொழில்நுட்பம், மற்றும், சுற்றுச் சூழல் துறை இயக்குநர் திருமதி ஆர் ஸ்மிதா, மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலர் திரு. ஆர். ஆர். ராஷ்மி, அமைச்சகத்தின் இணைக்கப் பிரிவுத் துணைச் செயலர் திருமதி ருசிகா ட்ரால், ஜெர்மன் சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பைச் சேர்ந்த திரு. ஹென்ரிக் பைச்செர்ட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த 2 நாள் கருத்தரங்கில், துறைவாரியாக இடம்பெறும் பல்வேறு அமர்வுகளில், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலங்கானா, மற்றும் லட்சத்தீவில் இருந்து, பருவநிலை நிபுணர்கள், அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள், மற்றும், சிவில் சமூக பிரதிநிதிகள் பங்கேற்கிறார்கள்.

------------------------------

*ஆர். செல்வம் (13)*

பிரிட்டீஷ் ஆட்சி காலத்தில், **மத்திய சட்டமன்றத்தின் முதல் சபா நாயக**ராக, திரு. வித்தல்பாய் பட்டேல் தேர்ந்தெடுக்கப் பட்டதன் நூற்றாண்டு விழாவை ஒட்டி, டெல்லி சட்டமன்ற வளாகத்தில் நடைபெறும் **இந்திய சபா நாயகர்கள் மாநாட்**டில், புதுச்சேரி சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் கலந்து கொண்டு, **விடுதலைக்கு முந்தைய சட்டமன்றங்களில், தேசியவாத தலைவர்கள் மற்றும் சமூக சீர்திருத்தங்களின் பங்கு** என்பது குறித்து உரையாற்றினார். 1947-ல் இந்தியா சுதந்திரம் பெற்று 7 ஆண்டு போராட்டங்களுக்கு பின்னரே, புதுச்சேரி மக்கள் பிரெஞ்ச் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றதன் வரலாற்றை அவர் எடுத்துக் கூறினார். சுதந்திர இயக்கம், மற்றும், சமூக சீர்திருத்தங்களில் முக்கிய பங்காற்றியும், பலரால் அறியப்படாத மாவீரர்களின் பெயர்களை கொண்டாடும் வகையில், புதுச்சேரி கடற்கரையில், தியாகச் சுவர் கட்டப்பட்டு இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

------------------------------

*புதுச்சேரி கண்தானம் 1* (10)

40ஆவது தேசிய கண்தான வார விழாவை ஒட்டி, புதுச்சேரியில் இன்று நடைபெற்ற விழப்புணர்வு பேரணியில், செவிலியர் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். தேசியப் பார்வை இழப்பு தடுப்புத் திட்டமும், இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் புதுச்சேரி கிளையும் இணைந்து ஏற்பாடு செய்து இருந்த இப்பேரணியை, கண்பார்வை இழப்பு தடுப்புத் திட்ட அதிகாரி டாக்டர் வர்ஷினி, கொடியசைத்து தொடக்கி வைத்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்தியாவில் 13 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு, கருவிழி பாதிப்பு இருப்பதாகவும், இக்குறைபாடு தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், கண்தானம் மிகவும் அவசியமாகி உள்ளதாகவும் கூறினார். டாக்டர் வர்ஷினி மேலும் கூறுகையில்.....

**(வாய்ஸ்-டாக்டர் வர்ஷினி)**

*புதுச்சேரி கண்தானம் 2* (3)

கண்தான விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்ட செவிலியர் கல்லூரி மாணவிகளில் ஒருவரான ஹமீதா எமது செய்தியாளரிடம் பேசுகையில்......

**(வாய்ஸ்-ஹமீதா)**

------------------------------

*அமித் ஷா-மசோதா* (16)

சிறையில் இருந்தாலும் ஆட்சி அதிகாரத்தில் நீடிக்க விரும்புவோர்தான், 130ஆவது அரசியல் சாசன திருத்த மசோதாவை எதிர்ப்பதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த அவர், 130ஆவது அரசியல் சாசன திருத்த மசோதாவை எதிர்கட்சிகள் எதிர்ப்பது, ஜனநாயகத்திற்கு எதிரானது என்றார். 2 ஆண்டுகள், அல்லது, அதற்குமேல் சிறை தண்டனைக்கு ஆளாகும் மக்கள் பிரதிநிதிகளை, பதவி நீக்கம் செய்யும் வகையிலான இம்மசோதாவில், பிரதமர் பதவியையும் சேர்க்க வலியுறுத்தியதே, பிரதமர் திரு. நரேந்திர மோடிதான் என்றும் அவர் குறிப்பிட்டார். 130ஆவது அரசியல் சாசன திருத்த மசோதா பற்றிய கூட்டு நாடாளுமன்றக் குழுவை, எதிர்கட்சிகள் புறக்கணித்தாலும், குழுவின் எஞ்சிய உறுப்பினர்கள் தொடர்ந்து செயல்படுவார்கள் என்று திரு. அமித் ஷா தெரிவித்தார். மற்றொரு கேள்விக்கு அவர் பதில் அளிக்கையில், குடியரசுத் துணைத் தலைவர் பதவியில் இருந்து, உடல்நலக் காரணங்களுக்காகவே, திரு. ஜெக்தீப் தன்கர் விலகியதாகவும், எதிர்கட்சிகள் இப்பிரச்சனையை மேலும் இழுத்தடிக்க வேண்டாம் என்றும் கூறினார்.

------------------------------

வானிலை (12)

அடுத்த 48 மணி நேரத்தில், ஒடிசா மற்றும் மேற்கு வங்கத்திற்கு அப்பால், வடமேற்கு வங்கக் கடலில், காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றும்-நாளையும், தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், வரும் 31ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, மயிலாடுதுரை மாவட்டம் கொள்ளிடத்தில், 6 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்கால் உள்ளிட்ட இடங்களில், தலா 2 செ.மீ மழை பெய்துள்ளது.

------------------------------

பளு தூக்குதல் (5)

அகமதாபாத்தில் இன்று தொடங்கி உள்ள 30ஆவது காமன்வெல்த் பளு தூக்கும் சேம்பியன் பட்டப் போட்டிகளில், இந்தியா முதல் நாளன்றே, 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது. மகளிர் 44 முதல் 48 கிலோ எடைப் பிரிவில், இந்தியாவின் ப்ரீத்திஸ்மிதா போய், மகளிர் 56 முதல் 60 கிலோ எடைப் பிரிவில், இந்தியாவின் தரம்ஜோதி தேவ்காரியா ஆகியோர் தங்கம் வென்றனர்.

------------------------------

வங்கித் துறை (16)

வங்கித் துறையின் பிரச்சனைகளை விவாதித்து, எதிர்கால வளர்ச்சிக்கான செயல் திட்டங்களை உருவாக்குவது தொடர்பாக, ஃபிக்கி-தொழில் வர்த்தக கூட்டமைப்பும், இந்திய வங்கிகள் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள, 2 நாள் FIBAC மாநாட்டை, இன்று மும்பையில், ரிசர்வ வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தொடக்கி வைத்தார். உலகின் 3ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் பாதையில் இந்தியா பயணித்து வருவதாக அவர் தமது உரையில் கூறினார். சர்வதேச புவி-அரசியல் சூழல் மற்றும் வர்த்தக விரிசல்களால், உலகப் பொருளாதாரம் சவாலான கட்டத்தில் உள்ள நிலையில், வளர்ச்சி-ஸ்திரத் தன்மை இரண்டையும் சமன்படுத்தும் வகையிலான பணக் கொள்கை அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். இந்திய வங்கித் துறையினர், உண்மை நிலவரங்களை புறந்தள்ளாமல் புதிய சவால்களை சமாளிப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றும், அதேசமயம், புதிய வாய்ப்புகளை தவறாமல் பற்றிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். உலகெங்கிலும் இருந்து வங்கித் துறை சார்ந்த முக்கிய பிரமுகர்கள், மற்றும், நிபுணர்கள், இந்த 2 நாள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

-------------------------------

*எரிசக்தி (10)*

புதுப்பிக்கவல்ல எரிசக்தி மேம்பாட்டிற்கான இந்திய முகமை, கடந்த நிதியாண்டில், செயல்பாடுகள் மூலமான வருவாய் இலக்கை தாண்டி, 6 ஆயிரத்து 743 கோடி ரூபாய் வருவாய் ஈட்டி உள்ளது. நடப்பு நிதியாண்டில் இந்த இலக்கை 8 ஆயிரத்து 200 கோடியாக உயர்த்தி, மத்திய அரசின் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறை அமைச்சகம், புதுப்பிக்கவல்ல எரிசக்தி முகமையுடன், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. நடப்பாண்டில், முதலீடுகள் மீதான வருவாய் விகிதம், வரிக்கு முந்தைய வருவாய், சொத்துக்களின் தேய்மானம் போன்ற அம்சங்கள், எந்த அளவில் இருக்க வேண்டும் என்பது குறித்தும், இந்த உடன்பாட்டில், இலக்குகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

-------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்னும் நிலைப்பாட்டை, **இந்தியா**வும்-**ஃபிஜி**யும், மீண்டும் வலியுறுத்தி உள்ளன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை **குஜராத் மாநிலம் அகமதாபாத்**தில், மொத்தம் 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களை தொடக்கி வைக்கிறார்.

பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற நடைமுறைகள் குறித்து, **தேசிய திட்டம்** ஒன்றை தயாரிப்பது பற்றிய, 2 நாள் **பிராந்தியப் பயிலரங்கு**, புதுச்சேரியில் இன்று தொடங்கி உள்ளது.

புதுச்சேரி சட்டப் பேரவைத் தலைவர் **திரு. ஆர். செல்வம்**, டெல்லியில் நடைபெறும் **இந்திய சபா நாயகர்கள் மாநாட்டி**ல், கலந்து கொண்டு உரையாற்றினார்.

இத்துடன் இந்த செய்திச் சுருக்கம் நிறைவு பெறுகிறது.